


"நான் நீட்டி முழக்கப் போவதில்லை. எனக்கு முன்னால், என்னைக் காட்டிலும் தகுதியான எத்தனையோ பேர், எத்தனையோ முறை பேசியும் நீங்கள் புரிந்துகொள்ளவில்லை. அவர்கள் அனைவரும் அரபியில் பேசினார்கள் என்பது, ஒரு காரணமாக இருக்கலாம். அதனால்தான், நான் உங்கள் மொழியைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன். இதுவாவது உங்களுக்குப் புரிகிறதா பார்க்கலாம்.

எங்கள் வார்த்தைகள் மதிப்பிழந்து, இறந்துவிட்டன. எங்கள் ரத்தத்தைச் சிந்தித்தான் நாங்கள் அதற்கு உயிர்கொடுக்க வேண்டியிருக்கிறது.

இந்தச் சில சொற்களேகூடப் போதும். மீடியா இதற்குள் என்னைப் பற்றி ஒரு வண்ணப்படம் வரைந்து பாகம் குறித்துவிட்டிருக்கும். உண்மையில் நானும் என்னைப்போன்ற ஆயிரக்கணக்கானவர்கள் வாழ்வது, செயல்படுவது அனைத்தும் நாங்கள் நம்பும் ஒரு விஷயத்துக்காக மட்டுமே. இந்த உலகம் எங்களுக்குத் தரத் தயாராக இருக்கும் சுக சௌகரியங்களுக்காக, நாங்கள் வாழவில்லை. எங்கள் நோக்கமும் செயல்பாடுகளும் அதற்கெல்லாம் அப்பாற்பட்டவை. இஸ்லாம் எங்கள் மதம். ஏக இறைவனை நம்பி, அவனது இறுதித் தூதரின் அடியொற்றி நடக்கிறவர்கள் நாங்கள்.

எங்கள் செயல்பாடுகளை, இந்தச் சட்டத்துக்குள்தான் நாங்கள் அமைத்துக்கொள்கிறோம்.

உங்களது தேர்ந்தெடுத்த ஜனநாயக அரசுகள் உலகெங்கும், தொடர்ந்து எங்கள் மக்களுக்கு எதிரான அட்டூழியங்களை நிகழ்த்தி வருகின்றன. இந்த அரசுகளின் குடிமக்களாகிய நீங்கள், எப்படி உங்கள் அரசுகளை ஆதரித்து இதற்கு முழுப் பொறுப்பாகிறீர்களோ, அதே மாதிரிதான் என் முஸ்லிம் சகோதர, சகோதரிகளைக் காப்பாற்றும் முழுப் பொறுப்பாளனாக என்னை நான் உணர்கிறேன்.

நாங்கள் பாதுகாப்பாக இருப்பதாக உணராதவரை, நீங்கள் எங்கள் இலக்காகவே இருப்பீர்கள். எங்கள் மக்களின் மீது நீங்கள் குண்டு வீசி, விஷப்புகை வீசி, அவர்களைச் சித்திரவதைப்படுத்துவதை நிறுத்தாதவரை, நாங்கள் எங்கள் யுத்தத்தை நிறுத்தப்போவதில்லை.

இறைவனை நான் பிரார்த்திக்கிறேன். இறைவனின் தூதர்களுக்கு நிகராக நான் மதிக்கும் தற்கொலைப் போராளிகளை, என் அன்புக்குரிய தலைவர்களான ஒசாமா பின்லேடன், டாக்டர் ஐமன் அல் ஜவாஹிரி, இன்னும் எத்தனையோ போராளிச் சகோதர சகோதரிகளின் உயர்ந்த ஸ்தானத்துக்கு, என்னை உயர்த்திய பரம்பொருளுக்கு நன்றி கூறுகிறேன்.

என்னுடைய இந்தச் செயலின் முக்கியத்துவம் உணர்ந்து, எனக்கான மறுமை சிறப்பாக அமைய, இறைவனைப் பிரார்த்திக்கும்படி என் சகோதர, சகோதரிகளைக் கேட்டுக்கொள்கிறேன்.."

– முகம்மது சித்திக் கான் என்கிற லண்டன் கான், எப்போது தன்னுடைய இந்த இறுதி உரையை நிகழ்த்தி, டேப் செய்து, அல் ஜசீரா தொலைக்காட்சிக்கு அனுப்பிவைத்தான் என்பது குறித்த சரியான தகவல்கள் இல்லை.

மேற்படி ஆங்கில உரை முழுமையானதும் இல்லை. ஒலிப்பதிவில் நிகழ்ந்திருக்கும் சில கோளாறுகள் காரணமாக, நான்கு அல்லது ஐந்து இடங்களில் வரிகள் சரியாகப் புரிவதில்லை. குறிப்பாக, இந்தச் சிறு உரையின் கடைசி இரு பத்திகளில், அதிகத் தெளிவில்லை. ஒரு குத்துமதிப்பாகத்தான் மொழிபெயர்த்திருக்கிறேன். அது ஒரு பெரிய பிரச்னை இல்லை.

விஷயம் என்னவென்றால், இந்த உரை அல் ஜசீராவில் ஒலிபரப்பப்பட்ட பிறகுதான், லண்டன் குண்டுவெடிப்புச் சம்பவத்துடன் அல் காயிதாவுக்கு இருக்கும் தொடர்பே உறுதிப்படுத்தப்பட்டது.

இந்த ஒலிபரப்புக்குப் பிறகு, இது தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொண்ட சில மத்தியக் கிழக்கு நாடுகளைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள், கான் பேசிய டேப் அப்படியே ஒலிபரப்பப்படவில்லை என்றும், அது அல் காயிதா மேலிடத்துக்குப் போய், அங்கே எடிட் செய்யப்பட்டு வந்த பிறகே, ஒலிபரப்பப்பட்டது என்றும் தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாக, இதில் கையாளப்பட்டிருக்கும் சில சொற்களை வைத்து, இதனை எடிட் செய்தது ஜவாஹிரியாகத்தான் இருக்கவேண்டும் என்கிற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். எடிட்டிங்கில் நேர்ந்த சில தொழில்நுட்பச் சிக்கல்கள் காரணமாகத்தான் டேப் தெளிவாக இல்லை.

7 ஜூலை 2005 அன்று நடைபெற்ற இந்த லண்டன் குண்டுவெடிப்புச் சம்பவத்தின் தொடர்ச்சி, 21 ஜூலை அன்று மீண்டும் அரங்கேறி நான்கு குண்டுகள் வெடித்தன; அதன் தொடர்பாக, மேலும் நான்கு பெயர்கள் வெளியிடப்பட்டன. அதுவும் அல் காயிதாவின் திருவிளையாடல்தான் என்றபோதும், ஒவ்வொரு சம்பவத்தையும் விவரிப்பது இங்கே நோக்கமில்லை என்பதால், இது தொடர்பான விவரங்களை இந்த இடத்தில் நிறுத்திக்கொள்வோம். இந்தச் சம்பவம் நமக்குத் தெரிவிக்கும் விவரங்கள் என்ன? அதுதான் முக்கியம். ஒரு பட்டியல் போட்டுவிடுவோமா?

எத்தனை புற நெருக்கடிகள் இருந்தாலும் (அமெரிக்கத் தேடுதல் வேட்டை, ஹமீத் கர்சாய் ஆட்சி, உற்ற தோழர்களான தாலிபன்கள் காணாமல் போனது, வங்கிக் கணக்குகள் முடக்கம் இன்னபிற.) அல் காயிதா ஒரு செயலைச் செய்ய முடிவு செய்துவிட்டால், எப்படியும் அதனைச் செய்தே தீரும்.

தன்னிடம் ஆயிரக்கணக்கில் ஆள் பலம் இருந்தாலும், மிகப்பெரிய காரியங்களைத் தயங்காமல் புதுமுகங்களைக் கொண்டு செய்வார்கள்.

போராளிகளுக்குப் பயிற்சியளிக்கும் நிலையில், தான் இல்லாதபோதும் தனது நெட் ஒர்க் பலத்தைக் கொண்டு, உலகின் எந்த மூலையில் வேண்டுமானாலும் அவர்களுக்கான பயிற்சியை, யாரைக் கொண்டு வேண்டுமானாலும் அளிப்பார்கள்.

மூளைச் சலவை எக்ஸ்பர்ட்ஸ்.

புதுமுகப் போராளிகளே ஈடுபடுகிறார்கள் என்றாலும், காரியம் முடியும்வரை விஷயம் வெளியே சிந்தாமல் பார்த்துக்கொள்ளும் வல்லமை படைத்த இயக்கம்.

பயிற்சிக்கு, செயலுக்கு எத்தனை செலவானாலும் கவலைப்படாதவர்கள்.
தானே முன்வந்து ஒப்புக்கொள்ளாதவரை அல்லது தெரியப்படுத்தாதவரை, தன் பெயர் வெளியே வராதபடி பார்த்துக்கொள்ள அல் காயிதாவால் முடியும்.

இஸ்லாமிய சகோதரத்துவம் என்கிற சித்தாந்தத்தை முன்வைத்து, சூடானில் உட்கார்ந்துகொண்டு

சுற்றுமுற்றும் உள்ள அத்தனை தேசங்களிலும் அல் காயிதாவின் கிளைகளை ஒசாமா நிறுவிக்கொண்டிருந்த கட்டத்தைப் பார்த்துக்கொண்டிருந்தோம். தனது போராளிகளுக்கு, அல் காயிதா எப்படிப் பயிற்சி கொடுக்கிறது என்பதைக் கவனித்தபோது, அந்த அரபி பயிற்சிக் கையேடு, அங்கிருந்து இங்கிலாந்து, கான் நண்பர்கள் என்று ஐந்து அத்தியாயங்களில் எங்கெங்கோ போய்விட்டோம்.

வேறு வழியில்லை. மீண்டும் சூடானுக்குத்தான் திரும்பியாகவேண்டும். இந்த எழுச்சி, பயிற்சி, கிளர்ச்சி சமாசாரங்களெல்லாம் வெண்ணெய் மாதிரி வழுக்கிக்கொண்டு சுலபமாக நடந்தபோது, மிக மிக முக்கியமான இன்னொரு காரியத்தையும், அல் காயிதா சூடானில் இருந்தபடிக்குச் செய்ய ஆரம்பித்தது.

நம் ஊர் அரசியல்வாதிகள் எல்லாம் அவ்வப்போது மாநில மாநாடுகள், கூட்டணிக் கட்சி மாநாடுகள் என்று நடத்துவார்கள் இல்லையா? அந்த மாதிரி அல் காயிதா, சூடான் தலைநகர் கார்ட்டொம் நகரில் சில சர்வதேச மாநாடுகள் நடத்த ஆரம்பித்தது. இதில் விசேஷம் என்னவென்றால், கூட்டணிக் கட்சிக்காரர்கள் மட்டும் கலந்துகொள்ளும் மாநாடுகள் அல்ல அவை. மாறாக, எதிர்க்கட்சிக்காரர்களையும் பிரதானமாகக் கூப்பிட்டு உட்காரவைத்து நடத்தப்பட்ட மாநாடுகள்.

ரொம்ப விசித்திரமான, அதே சமயம் படு சாமர்த்தியமான விஷயம் இது.

நாமெல்லாம் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறோம்? அல் காயிதா என்பது ஒரு மாபெரும் தீவிரவாத இயக்கம். ஆகவே, தீவிரவாத மனோபாவம் கொண்ட அத்தனை முஸ்லிம்களுமே அல் காயிதாவை ஆதரிப்பார்கள். அப்படித்தானே?

அதுதான் இல்லை. ஒசாமா பின்லேடன் ஒரு சன்னி முஸ்லிம். அல் காயிதாவில் இருக்கிற அத்தனை பேருமே இஸ்லாத்தின் சன்னி பிரிவைச் சார்ந்தவர்கள். ஒசாமாவுக்குத் தனிப்பட்ட முறையில் ஷியா முஸ்லிம்களைப் பிடிக்காது. ஆகவே, ஷியா தீவிரவாத இயக்கங்களையும். உதாரணமாக, லெபனானிலிருந்து இயங்கும் ஹெஸ்புல்லா இயக்கத்தை எடுத்துக்கொள்ளலாம். இது ஒரு ஷியா தீவிரவாத அமைப்பு. தெற்கு லெபனானில் அத்துமீறி நுழைந்து, இஸ்ரேல் ஆக்கிரமித்து வைத்திருக்கும் பகுதிகளை மீட்பதைத் தங்கள் முதல் நோக்கமாகக் கொண்டு, 1982-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஓர் இயக்கம். பின்னால் இந்த இயக்கத்தின் அரசியல் பிரிவு தேர்தலிலெல்லாம் நின்று, லெபனான் அரசியல் வானைக் கலக்கிய சமாசாரங்களையெல்லாம் பிறகு விரிவாகப் பார்க்கத்தான் போகிறோம்.

படு தில்லாக, ஒரு பக்கம், நூற்று நாற்பத்தெட்டாவது வட்டத்தின் சார்பில் பொதுக்கூட்டங்கள் நடத்தி, வோட்டு வாங்கி பார்லிமெண்ட்டுக்கும் போவார்கள்; இன்னொரு பக்கம், ஏகே 47ஐ எடுத்துக்கொண்டு பட்டாசு வெடிக்கவும் போவார்கள். ஏன் என்று லெபனானில் ஒரு கொசு கூடக் கேட்காது. அவர்களுடைய செல்வாக்கு அப்படிப்பட்டது.

கிட்டத்தட்ட அல் காயிதா வயதுதான் ஹெஸ்புல்லாவுக்கும். 'அல் முகாவாமா அல் இஸ்லாமியா' என்கிற இந்த அமைப்பின் ராணுவத்தில் உத்தியோகம் பார்க்கும் சாதாரண ஜவான் முதல் தலைமைத் தளபதி வரை அத்தனை பேருக்கும், ஒசாமா பின்லேடனையும் அவரது அல் காயிதாவையும் ஆதியோடு அந்தமாகத் தெரியும். இவர்களில் பலரும் கூட ஆப்கன் யுத்தத்தில் பங்குபெற்றிருக்கிறார்கள்.

இத்தனை இருந்தும் ஹெஸ்புல்லாவை அல் காயிதா கிட்டே சேர்க்காது. ஊர் உலகமெல்லாம் இருக்கிற இஸ்லாமியத் தீவிரவாத அமைப்புகளிடம் போய் On behalf of al gaida வேலை பார்க்கச் சொல்லி கேன்வாஸ் செய்து, ஏகப்பட்ட செலவும் செய்யும் அல் காயிதா, பீமபுஷ்டி பலம்மிக்க ஹெஸ்புல்லா வலிய வந்தாலும் ஏற்காது. ஓர் உதாரணத்துக்குத்தான் இந்த

ஹெஸ்புல்லா. இம்மாதிரி ஒட்டவே ஒட்டாத எத்தனையோ பல பெரிய, நடுத்தர, சிறிய தீவிரவாத அமைப்புகள் அல் காயிதாவுடன் சேராதவை இருக்கின்றன.

இவர்களையெல்லாம் கடைசி வரை கிட்டே சேர்க்காமலேயே இருப்பதா அல்லது கொள்கை அளவில் மட்டும் தோழர்கள் ஆக்கிக்கொள்வதா, செயல்திட்டங்களின் அடிப்படையில், அசைன்மெண்ட் அடிப்படையில் மட்டும் நல்லுறவு கொள்வதா? என்கிற கேள்வி எழுந்தபோதுதான், அல் காயிதாவுக்கு அந்த மாநாட்டு ஐடியா வந்தது.

இஸ்லாமிய சகோதரத்துவம் என்று பேசுகிறோம். ஆனால், ஷியாக்களைச் சகோதரர்களாக ஏற்காத ஓர் இயக்கத்தைப் பார்த்துச் சிரிக்கமாட்டார்கள்? இந்தக் கேள்வியின் விளைவுதான் மேற்சொன்ன மாநாடுகள்.

இந்தக் கேள்வியைக் கேட்டு, ஒசாமாவை இது விஷயத்தில் சற்றே வித்தியாசமாகச் சிந்திக்கத் தூண்டியவர், சூடானின் அதிபர் அசன் அல் துராபி. மேற்படி மாநாட்டு யோசனையை முன்வைத்தவரும் அவர்தான்.

“அவர்களும் முஸ்லிம்கள்தான். அவர்களும் ஆதிக்க சக்திகளுக்கு எதிராகத்தான் போராடிக்கொண்டிருக்கிறார்கள். நாம் இணைந்து பணியாற்றாவிட்டாலும் நமக்குள் நல்லுறவு இல்லாவிட்டாலும் பகை இல்லை என்றாவது உலகுக்குத் தெரியப்படுத்த வேண்டாமா?” என்று கேட்டார் துராபி.

இதில் உள்ள நியாயத்தைக் கணக்கில்கொண்டு ஒசாமா சகல இஸ்லாமிய அமைப்புகளுக்கும் சூடான் அரசு சார்பில், மாநாடுகளில் கலந்துகொள்ள அழைப்பு அனுப்ப ஒப்புக்கொண்டார்.

என்ன மாநாடு?
சூடானில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை அரசின் ஆதரவோடு, யாராவது மக்கள் நலப்பணி அமைப்பின் பெயரில், ஒரு சர்வதேச இஸ்லாமிய அறிஞர்கள் மாநாடு திடீரென்று ஏற்பாடு ஆகும்.

நிஜமான அறிஞர்கள் சிலரும் அழைக்கப்படுவார்கள். அவர்களெல்லாம் மேடை போட்டு மைக் வைத்து மக்கள் மத்தியில் பேசிக்கொண்டிருப்பார்கள். கூடவே உலகெங்கும் இயங்கும் பல்வேறு இஸ்லாமியத் தீவிரவாத அமைப்புகளின் தலைவர்களும் அழைக்கப்படுவார்கள். இவர்கள் தனியே மீட்டிங் ரூமில் ரகசிய மாநாடு நடத்துவார்கள். அழைப்பிதழில் ஒசாமாவின் பெயர் இருக்காது. ஆனால், அவர் பின்னணியில் இருக்கிறார் என்கிற தகவல் அனுப்பப்பட்டுவிடும். ஷியா, சன்னி பாகுபாடெல்லாம் இந்த மாநாட்டில் பார்க்கப்படாது. ‘இஸ்லாமியத் தீவிரவாத அமைப்பா? வா, வந்து உட்கார்.’ அவ்வளவுதான். போகவர ஆகும் செலவுகள், தங்கும் வசதி, சாப்பாடு அனைத்தையும் சூடான் அரசாங்கம் பார்த்துக்கொள்ளும். (அதாவது சூடான் அரசுக்கு, அல் காயிதா நிதி உதவி செய்யும்.)

ஜோராக ஊரை அடைத்து ஷாமியானா போட்டு, கவனமாக சர்வதேச மீடியாவை உள்ளே விடாமல் தடுத்துவிட்டு மாநாடு நடக்கும். பிரமாதமான விஷயம் ஏதுமில்லை என்றாலும், இஸ்லாமிய சகோதரத்துவம் என்கிற சித்தாந்தம், இஸ்லாத்தில் உள்ள இரு பிரிவுகளைக் காரணம் கொண்டு கேலிப்பொருளாகிவிடக் கூடாது என்பதைத்தான், அதிகம் வலியுறுத்துவார்கள்.

சுமார் ஆறு அல்லது ஏழு மாநாடுகள் இப்படியாக நடந்தன. எந்த மாநாட்டுக்கும் ஒசாமா செல்லவில்லை. ஆனால், அல் காயிதாவின் மூத்த தளபதிகள் பலரும் கலந்துகொண்டார்கள். ஒரே ஒரு மாநாட்டுக்கு மட்டும் பார்வையாளராக ஒசாமா கலந்துகொள்ளப் போனார். அதுவும் கூட, துராபியின் வற்புறுத்தலினால்தான்.

அந்தச் சந்தர்ப்பத்தில்தான், யாருமே எதிர்பாராத ஒரு விஷயம் நடந்தது.